மத்திய மாகாணத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் பாடசாலைகளில் நிலவும் க.பொ.த. (உயர் தரம்) கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பவியல், வெளிநாட்டு மொழி மற்றும் விசேடக் கல்வி போன்ற பாடங்களின் வெற்றிடங்களுக்காக பட்டதாரி ஆசிரியர்களை ஆட்சேர்த்தல் – 2023

மத்திய மாகாணத்தின் மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் க.பொ.த (உயர் தரம்) கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பவியல், வெளிநாட்டு மொழி மற்றும் விசேடக் கல்வி பாடங்களுக்காக நிலவும் வெற்றிடங்களுக்காக மத்திய மாகாண அரச சேவையின் இலங்கை ஆசிரியர் சேவையின் சட்ட பிரமாணங்களின் பிரகாரம் இலங்கை ஆசிரியர் சேவையின் 3-I தரத்திற்கு சேர்த்துக் கொள்வதன் பொருட்டு இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மத்திய மாகாணத்தை நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. ஆட்சேர்ப்பதற்கான பொதுத் தகைமைகள்

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ii. மத்திய மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றக் கூடியவராகவிருத்தல் வேண்டும்.

iii. நல்ல நன்னடத்தை மற்றும் சிறந்த உள மற்றும் உடல் ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்.

iv. 2023-09-08ஆம் திகதியில் முன்னர் 03 வருட காலம் மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

❖ மத்திய மாகாணத்தில் கடந்த 03 வருட காலம் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவருடன் சட்டபூர்வமாக திருமணம் செய்து கொண்டு மத்திய மாகாணத்திற்கு நிரந்தரமாக வசிக்க வந்தவர்கள் தமது வதிவை உறுதிப்படுத்தும் ஆவணச் சாட்சிகளுடன் விண்ணப்பிக்கலாம்.

v. 2023-09-08ஆம் திகதியில் 18 வயதிற்குக் குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவுமிருத்தல் வேண்டும்.

02. கல்வித் தகைமைகள்

i. மத்திய மாகாண அரசாங்க சேவையின் இலங்கை ஆசிரியர் சேவை சட்டவாக்கத்தின் பிரகாரம் 2023-09-08ஆம் திகதியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனத்தினால் வழங்கப்படும் பட்டமொன்று இருத்தல் வேண்டும் என்பதுடன் இந்த அறிவித்தலின் 01ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு விண்ணப்பிப்பதற்கு இயைபாக பெற்றுக்கொண்ட பட்டம் தொடர்பான தகவல்களை இந்த அமைச்சின் www.cm.cp.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

மற்றும்

ii. க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் (பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

iii. மத்திய மாகாண அரசாங்க சேவையின் இலங்கை ஆசிரியர் சேவை சட்டவாக்கத்தின் பிரகாரம் க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி சகிதம் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

கவனிக்கவும்:

- விண்ணப்பப்படிவம் கோரும் திகதியில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- மேற்கூறப்பட்ட ஆட்சேர்ப்பின் அடிப்படைத் தகைமைகள் மற்றும் கல்வித் தகைமைகள் இல்லாதவர்கள் விண்ணப்பிக்க வேண்டாம் என விசேடமாகக் அறிவிக்கப்படுவதுடன் அவ்வாறான விண்ணப்பப் படிவங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

01ஆம் இலக்க அட்டவணை

பின்வரும் பாடங்களுக்கு இயைபாக பாடசாலைகளிலுள்ள வெற்றிடங்களுக்காக ஆட்சேர்க்கப்படும்.

பாட குறியீட்டு இலக்கம்	பாடங்கள்	மொழி மூலம்		
		சிங்களம்	தமிழ்	ஆங்கிலம்
1	இரசாயனவியல்	✓	✓	✓
2	பௌதிகவியல்	✓	✓	✓
3	உயிரியல்	✓	✓	✓
4	கமத்தொழிலியல்	✓	✓	✓
5	இணைந்த கணிதம்	✓	✓	✓
6	பொறியியல் தொழில்நுட்பவியல்	✓	✓	
7	உயிரியல் முறைமை தொழில்நுட்பவியல்	✓	✓	
8	தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்	✓	✓	✓
9	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்	✓	✓	✓
10	ஆங்கிலம்	✓		✓
11	அரபு		✓	
12	பிரஞ்சு	✓		
14	ஜப்பான்	✓		✓
15	ஜேர்மன்	✓		
18	ஹிந்தி	✓		
19	சிறுவர் உளவியல் மற்றும் பாதுகாப்பு	✓		
20	சுகாதாரம் மற்றும் சுகாதார பாதுகாப்பு	✓	✓	
21	உடற்கல்வி மற்றும் விளையாட்டு	✓	✓	
22	அரங்கேற்றக் கலை	✓	✓	
23	நிகழ்வு முகாமைத்துவம்		✓	
24	கைப்பணி	✓	✓	
25	உள்ளக வடிவமைப்பு	✓	✓	
26	பெஷன் வடிவமைப்பு	✓	✓	
27	கிரபிக் வடிவமைப்பு	✓	✓	
28	பிரயோக தாவரவியல் தொழில்நுட்பக் கல்வி	✓	✓	
29	கால்நடைவள உற்பத்தி தொழில்நுட்பக் கல்வி		✓	
30	உணவு உற்பத்தி தொழில்நுட்பக் கல்வி	✓	✓	
31	நீரியல் வள தொழில்நுட்பக் கல்வி	✓		
32	பெருந்தோட்டப் பயிர் உற்பத்தி தொழில்நுட்பக் கல்வி	✓	✓	
33	நிர்மாண தொழில்நுட்பக் கல்வி	✓	✓	
34	மோட்டார் இயந்திர தொழில்நுட்பக் கல்வி	✓	✓	
35	மின்சாரம் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பக் கல்வி	✓	✓	
36	புடவைக் கைத்தொழில் மற்றும் ஆடை தொழில்நுட்பக் கல்வி		✓	
37	உலோக அமைப்புகள் தொழில்நுட்பக் கல்வி		✓	
38	அலுமினிய செயலாக்க தொழில்நுட்பக் கல்வி	✓	✓	
39	கணனி வன்பொருள் மற்றும் வலையமைப்பிடல்	✓	✓	
41	சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்	✓	✓	
42	சந்தைப்படுத்தல்	✓		
43	விசேடக் கல்வி	✓	✓	

03. விண்ணப்பிக்கும் முறை

i. விண்ணப்பம் இந்த அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்படல் வேண்டும்.

ii. அதை A4 அளவான தாளின் 01 முதல் 17 வரையான தலைப்புகளை முதலாம் பக்கத்திலும் 18 முதல் 33 வரையான தலைப்புகளை இரண்டாம் பக்கத்திலும் 34 முதல் 35 வரையான தலைப்புகளை மூன்றாம் பக்கத்தில் வரும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் விண்ணப்பதாரியினாலேயே நிரப்பப்படல் வேண்டும்.

iii. அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு அல்லது 32,960.00 ரூபா மாதாந்த ஆரம்ப அடிப்படைச் சம்பளம் அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளத்தைப் பெறும் அரசாங்க நிரந்தர பதவி வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

iv. பின்வரும் ஆவணங்களின் பிரதிகள் விண்ணப்ப படிவத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

அ) தேசிய அடையாள அட்டையின் புகைப்படப் பிரதி

ஆ) 2023-09-08ஆம் திகதி அல்லது அதற்கு முன் பூர்த்தி செய்துள்ள பட்டதாரிச் சான்றிதழின் புகைப்படப் பிரதி

இ) பட்டதாரிக் கற்கை நெறியை வெற்றிகரமாகப் நிறைவு செய்ததன் பின்னர் வழங்கப்படும் பாடம் மற்றும் செல்லுபடியாகும் திகதி என்பன குறிப்பிடப்பட்ட முழு விபரத்துடன் கூடிய சான்றிதழின் புகைப்படப் பிரதி

v. பிழையின்றி பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2023-09-08ம் திகதி அல்லது அதற்கு முன் "செயலாளர், மத்திய மாகாண கல்வி அமைச்சு, மாகாண சபை கட்டிடத் தொகுதி, பல்லேகலை" எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் " மத்திய மாகாணத்தின் மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் க.பொ.த (உயர் தரம்) கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பவியல், வெளிநாட்டு மொழி மற்றும் விசேடக் கல்வி பாடங்களுக்காக நிலவும் வெற்றிடங்களுக்காக பட்டதாரி ஆசிரியர்களை ஆட்சேர்த்தல் - 2023" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

vi. ஒரு அபேட்சகர் ஒரு விண்ணப்பப் படிவத்தை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். விண்ணதாரரொருவருக்கு ஒரு பாடத்திற்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்பதுடன் விண்ணப்பிக்கும் பாடம் எக்காரணம் கொண்டும் மாற்றப்படமாட்டாது என்பதுடன் அது சம்பந்தமாக செய்யப்படும் மேன்முறையீடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படமாட்டாது.

vii. விண்ணப்பிக்கும் போது வெற்றிட அட்டவணையில் உள்ள வெற்றிடங்களுக்காக மட்டுமே விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்கும் பாட குறியீட்டு இலக்கத்தைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

viii. அனைத்து வகையிலும் பூரணமற்ற விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

ix. விண்ணப்பப் படிவம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

x. பரீட்சைக்காக விண்ணப்பதாரர்களுக்கு மின்னஞ்சல் ஊடாக (E-mail) ஊடாக பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்ட உடன் அதுபற்றி www.cm.cp.gov.lk எனும் இணையதளத்தில் மற்றும் பத்திரிகைகளில் அறிவித்தல் பிரசுரிக்கப்படும். இதற்குப் புறம்பாக விண்ணப்பதாரர்களின் கையடக்கத் தொலைபேசிக்கு ம.மா.அரச சேவை ஆணைக்குழுவினால் குறுஞ்செய்தி (SMS) மூலம் அறியத்தரப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட 7 நாட்களின் பின் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடில் இந்த அமைச்சில் விசாரிக்கலாம்.

xi. தற்போது அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது திணைக்கள தலைவரினால் சான்றுபடுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.

04. ஆட்சேர்க்கும் முறை

i. நடாத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடையும் அபேட்சகர்களுக்கிடையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்பவர்கள் வரிசைக் கிரமத்திற்கு ஏற்ப அந்தந்த பாடங்களுக்காக மாகாணத்தினுள் நிலவும் ஆசிரியர் வெற்றிட எண்ணிக்கையின் மூன்று மடங்கானோர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக்கு நிர்ணயிக்கப்பட்ட தினத்தில் தோற்றாத விண்ணப்பதாரர்கள் தொடர்பில் பின்னர் எவ்விதத்திலும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. அதேபோல் நேர்முகப் பரீட்சைக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு சான்றிதழும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் கேட்கப்பட்டுள்ள சகல ஆவணங்கள் சகிதம் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுதல் கட்டாயமாகும்.

ii. நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

iii. நேர்முகப் பரீட்சையில் தகைமை பெறும் விண்ணப்பதாரர்கள் பின்னர் செயல்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். செயல்முறைப் பரீட்சையானது இலங்கை ஆசிரியர் சேவை சட்டவாக்கத்தின் "ஆ" பந்தியின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடாத்தப்படும். இது தொடர்பான விபரங்கள் அமைச்சின் www.cm.cp.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

iv. நேர்முகப் பரீட்சையில் தகைமை பெறும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு கட்டாயம் தோற்றுதல் வேண்டும் என்பதுடன் எழுத்துமூலப் பரீட்சை மற்றும் செயல்முறைப் பரீட்சையில் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் பிரகாரம் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களுக்கிடையில் ஒவ்வொரு பாடத்தின் பிரகாரம் நிலவும் வெற்றிடத்தின் பிரகாரம் குறித்த பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

05. பரீட்சைக்கு தோற்றுதல்:

i. விண்ணப்ப படிவங்களைச் சமர்ப்பித்துள்ள தகைமைகளுடனான அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அபேட்சகரொருவர் பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் தமது கையொப்பம் உறுதி செய்யப்பட்ட அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்காத அபேட்சகருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

குறிப்பு: அபேட்சகரொருவருக்கு அனுமதிச்சீட்டு வழங்கப்படுவது அல்லது நேர்முகப் பரீட்சைக்கு அல்லது செயல்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுதல் அல்லது பரீட்சைக்குத் தோற்றுதல் அவர் அல்லது அவள் நியமனம் வழங்குவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொண்டதாக கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

06. அபேட்சகரின் ஆளடையாளம்

சகல பரீட்சை அபேட்சகர்களும் பரீட்சை மண்டப பொறுப்பாளர் திருப்தியடையும் வகையில் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதன் பொருட்டு பின்வரும் ஏதாவதொரு ஆவணம் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

i. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

ii. செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச் சீட்டு

iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

07. பரீட்சை முறை மற்றும் பரீட்சை மொழி மூலம்

இப்பரீட்சை "சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில" மொழி மூலங்களில் நடாத்தப்படும். இங்கு சிங்கள மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக விண்ணப்பிப்பவர்கள் சிங்கள மொழி மூலத்திலும், தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக விண்ணப்பிப்பவர்கள் தமிழ் மொழி மூலத்திலும், ஆங்கில மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக விண்ணப்பிப்பவர்கள் ஆங்கில மொழி மூலத்திலும் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

சகல அபேட்சகர்களும் இந்த சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரு மொழி மூலத்தில் மட்டுமே தோற்றுதல் வேண்டும். அந்த மொழி மூலமே நியமனம் வழங்கப்படும் மொழி மூலமாகும்.

விண்ணப்பதாரரொருவர் சமர்ப்பித்துள்ள விண்ணப்ப படிவத்தில் தெரிவித்துள்ள மொழி மூலத்தை மாற்றுவதற்கு பின்னர் வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது.

08. பாடவிதானம்:

இப் பரீட்சைக்குரிய வினாத்தாள்களின் எண்ணிக்கை இரண்டாகும் இவ்விரண்டு வினாத்தாள்களும் பின்வரும் வகையில. பல்தேர்வு அல்லது சுருக்கமான பதிலை எதிர்பார்க்கும் கேள்விகளைக் கொண்டது. அனைத்து விண்ணப்பதாரர்களும் இவ்வினாத்தாள்களுக்கு தோற்றுதல் கட்டாயமாகும். எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாத் தாளிற்கும் குறைந்தபட்சம் 40 புள்ளிகள் வீதம் பெற்று இரண்டு பாடங்களிலும் சித்தியடைதல் வேண்டும்.

01. பொது உளச் சார்பு நேரம் 01 மணித்தியாலம் - 100 புள்ளிகள்

அபேட்சகரிடமுள்ள ஆசிரிய தொழிலுக்கான திறமை மற்றும் தர்க்கிக்கும் அறிவு தொடர்பான அறிவை அளவிட்டுப் பார்ப்பதை நோக்கமாகக் கொண்டு இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. பல்தேர்வு அல்லது சுருக்கமான பதில் மாதிரியிலான 50 வினாக்களைக் கொண்டது. அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

02. பொது அறிவு நேரம் 01 மணித்தியாலம் - 100 புள்ளிகள்

ஆசிரிய தொழிற்துறைக்கும் அத்துறை தொடர்பாக உள்ள பொது அறிவு அல்லது/ மற்றும் உள்நாட்டில் ஏற்பட்டுள்ள அல்லது ஏற்படும் கல்வி முன்னேற்றம் தொடர்பான பொது அறிவு மற்றும் கல்வி நவீனமயப்படுத்தல் தொடர்பான பொது அறிவை பரிசிப்பதற்காக இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. பல்தேர்வு அல்லது சுருக்கமான பதில் மாதிரியிலான 50 வினாக்களைக் கொண்டது. அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

09. பரீட்சைக் கட்டணம்

பரீட்சைக் கட்டணம் 600.00 ரூபாவாகும். இப்பரீட்சைக் கட்டணத்தை வருமானத் தலைப்பு இலக்கம் 20-03-02-13 மத்திய மாகாண சபையின் பிரதான செயலாளரின் பெயருக்கு மத்திய மாகாணத்திலுள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட நீல நிற பற்றுச்சீட்டை விண்ணப்ப படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டி அந்தப் பற்றுச்சீட்டின் இலக்கத்தை குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட பிரதேச செயலாளர் அலுவலகங்கள் தவிர்ந்த வேறு நிறுவனங்களுக்கு பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு அல்லது காசுக் கட்டளை அல்லது பணம் ஏதும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அறிவுரையின் பிரகாரம் குறித்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாத விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது. எக்காரணம் கொண்டும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

10. சேவை நிபந்தனைகள்

அரச நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் மத்திய மாகாணத்தின் அரச சேவையின் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் இலங்கை ஆசிரியர் சேவையின் பிரமாணக் கோவையில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அந்தப் பிரமாணங்களில் தரப்பட்டுள்ள அல்லது இதற்குப் பின் விடுக்கப்படும் மற்றும் திருத்தங்களுக்கு கட்டுப்படும் வகையில் தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர் மத்திய மாகாண அரச சேவையில் இலங்கை ஆசிரியர் சேவையின் 3-I(அ) தரத்தில் நியமிக்கப்படுவார்.

i. பதவி உயர்வு / சேவை நிபந்தனைகள் மத்திய மாகாண ஆளுநரினால் 2015-10-09ஆம் திகதி ஒப்புதல் அளிக்கப்பட்ட மத்திய மாகாண இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் கோவையின் விதிமுறைகளுக்கு அமைய இடம்பெறும்.

ii. இந்த பதவிகளுக்கு நியமனம் பெறும் சகல ஆசிரியர்களும் 03 வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படுவர். முதலில் நியமனம் பெறும் பாடசாலையில் 05 வருட காலம் சேவை செய்தல் வேண்டும். இந்த 05 வருட காலம் முடிந்தவுடன் இடமாற்றத்திற்கான தகைமையைப் பெறுவர்.

iii. இந்நியமனம் நிரந்தரமானதும் ஓய்வூதியத்துடனுமானது. இந்தப் பதவிக்கு உரித்தான ஓய்வூதிய முறை தொடர்பில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு நியமனம் பெறுபவர் கட்டுப்படல் வேண்டும்.

iv. 2020-10-16ஆம் திகதிய 18/2020 அறி.சுற்றுநிருபத்தின் பிரகாரம் இரண்டாம் அரச மொழி தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

v. சம்பள அளவு:
3/2016ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் இந்நியமனத்திற்குரித்தான சம்பளத் திட்டம் ஜீ-சு-I-2016 இலக்க சம்பள வகுதியில் ரூபா 31,490 - 445x6 - 525x7 - 600x2 - ரூபா 39,035 சம்பள அளவின் 14வது நிலையான 37,835/- ரூபாவில் அமர்த்தப்படுவர்.

11. பரீட்சை சகல மாவட்டங்களிலும் நடாத்தப்படுமா அல்லது எந்த மாவட்டத்தில் நடாத்தப்படும் என்பன பரீட்சை அபேட்சகர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

12. நியமனம் அமுலாகும் நாள் முதல் 14 நாட்களுக்குள் சேவைக்கு சமுகமளிக்க வேண்டும். நியமனம் கிடைக்கப்பெற்ற பாடசாலையை மாற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் எந்தவொரு வேண்டுகோளும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

13. விண்ணப்ப படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் முதல் எதிர்வரும் ஒரு வருட காலத்தினுள் ஆட்சேர்ப்பதற்கு மட்டுமே இந்த பத்திரிகை அறிவித்தல் செல்லுபடியாகும்.

14. இந்த அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பிலான இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை மற்றும் எந்தவொரு வெற்றிடங்களின் பகுதி அல்லது முழுவதுமாக நிரப்புதல் / நிரப்பாமல் விடல் அல்லது அது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமையை மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

15. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் மொழி சொற்றொடர்களுக்கிடையில் ஏதாவது வேறுபாடுகள் காணப்படுமாயின் சிங்கள மொழிமூல அறிவித்தல் சரியானது எனக் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எச்.எம்.எம்.யூ.பீ. ஹேரத்,
செயலாளர்,
பிரதான மற்றும் கல்வி அமைச்சு,
மத்திய மாகாணம்.

2023 ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதி,
பிரதான மற்றும் கல்வி அமைச்சு,
மத்திய மாகாணம்.

அலுவலக உபயோகத்திற்காக [ ]

மாதிரி விண்ணப்பப் படிவம்

மத்திய மாகாணத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் பாடசாலைகளில் நிலவும் க.பொ.த. (உயர் தரம்) கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பவியல், வெளிநாட்டு மொழி மற்றும் விசேடக் கல்வி போன்ற பாடங்களின் வெற்றிடங்களுக்காக பட்டதாரி ஆசிரியர்களை ஆட்சேர்த்தல் - 2023

1. முதலெழுத்துக்களை இறுதியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர்: (சிங்களத்தில் / தமிழில்)
2. முதலெழுத்துக்களை இறுதியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர்: (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) உ-ம்: PERERA A.B.)
3. முதலெழுத்துக்களால் அறியப்படும் பெயர்:
4. நிரந்தரமாக வதியும் மாவட்டம்:
   கண்டி [ ] மாத்தளை [ ] நுவரெலியா [ ]
   (உரிய மாவட்டத்திற்கு எதிரேயுள்ள கூட்டில் ✓அடையாளமிடவும். ஏனைய கூடுகளை வெற்றிடமாக விடவும்)
5. நிரந்தர வதிவு பிரதேச செயலாளர் பிரிவின் பெயர்:
6. நிரந்தர வதிவு கிராம சேவையாளர் பிரிவின் பெயர் மற்றும் இலக்கம்:
7. கிராம சேவையாளர் பிரிவில் வதியும் காலம்:
8. நிரந்தர வதிவிட முகவரி (சிங்களத்தில் / தமிழில்):
9. நிரந்தர வதிவிட முகவரி (ஆங்கிலத்தில்):
10. தொலைபேசி இலக்கம்:
    கையடக்கத் தொலைபேசி: நிலையான தொலைபேசி:
11. பயன்படுத்தும் மின்னஞ்சல் முகவரி (E-mail):
    (பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதற்கு)
12. ஆளடையாள அட்டை இலக்கம்:
13. பிறந்த திகதி: வருடம்: [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]
14. 2023-09-08ஆம் திகதியில் வயது: வருடம் [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] நாட்கள் [ ][ ]
15. பால்:
    பெண் [ ] ஆண் [ ]
    (உரிய கூட்டில் ✓அடையாளமிடவும். ஏனைய கூடுகளை வெற்றிடமாக விடவும்)
16. விவாக நிலை:
    திருமணமானவர் [ ] திருமணமாகாதவர் [ ]
    (உரிய கூட்டில் ✓அடையாளமிடவும். ஏனைய கூடுகளை வெற்றிடமாக விடவும்)
17. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்: சிங்களம் [ ] தமிழ் [ ] ஆங்கிலம் [ ]
    (உரிய கூட்டில் ✓அடையாளமிடவும். ஏனைய கூடுகளை வெற்றிடமாக விடவும்)
18. பரீட்சைக்குத் தோற்ற எதிர்பார்க்கும் மாவட்டம்:
    கண்டி [ ] மாத்தளை [ ] நுவரெலியா [ ]
    (உரிய கூட்டில் ✓அடையாளமிடவும். ஏனைய கூடுகளை வெற்றிடமாக விடவும்)
19. வலதுகுறைந்த நபரா என்பது பற்றி:
    கல்வித் தகைமைகள்:
20. பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கிடையில் விண்ணப்பிக்கும் பாடம்:
    பாட குறியீட்டு இலக்கம்:
    (வெற்றிட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்)
21. பட்டத்தின் பெயர்:
22. வழங்கிய பல்கலைக்கழகம்:
23. பட்டம் செல்லுபடியாகும் திகதி:
    க.பொ.த. (சா/த)ரப் பரீட்சைப் பெறுபேறுகள்:
24. சுட்டெண்:
25. பரீட்சைக்குத் தோற்றிய வருடம்:
26. பரீட்சை பெறுபேறுகள்:

தொடர் இலக்கம்	பாடம்	பெற்றுள்ள சித்தி	தொடர் இலக்கம்	பாடம்	பெற்றுள்ள சித்தி
1			6		
2			7		
3			8		
4			9		
5			10		

க.பொ.த. (உ/த)ரப் பரீட்சைப் பெறுபேறுகள்:

27. சுட்டெண்:
28. பரீட்சைக்குத் தோற்றிய வருடம்:
29. பரீட்சை பெறுபேறுகள்:

தொடர் இலக்கம்	பாடம்	பெற்றுள்ள சித்தி
1		
2		
3		
4		

30. செலுத்திய பரீட்சைக் கட்டணம் ரூபா (எழுத்துக்களில்):
31. பற்றுச்சீட்டின் இலக்கம்:
32. வழங்கிய அலுவலகம்:
33. திகதி:

பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும்

இங்கு என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் நான் அறிந்த வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். நான் இந்த பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின் தகைமையற்றவன் எனத் தெரியவரின் நான் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதை நானறிவேன். மேலும் இப்பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுகிறேன் என நான் பிரகடனப்படுத்துகிறேன். இங்கு தரப்பட்டுள்ள தகவல்களை பின்னர் மாற்றமாட்டேன்.

திகதி ....
கையொப்பம்

34. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் வண/திரு/திருமதி/செல்வி .... என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் .... ஆந் திகதி இட்டார் எனவும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் எனவும் அதன் பற்றுச்சீட்டை இங்கு ஒட்டியுள்ளார் என்பதையும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி................................ ....
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர்:..
பதவி: ....
முகவரி: ....

35. விண்ணப்பதாரர் மத்திய அரச அல்லது மாகாண அரச சேவையில் சேவையாற்றுபவரானால் தமது திணைக்கள தலைவரின் சான்று

வண/திரு/திருமதி/செல்வி.. என்பவரின் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கிறேன். அவர் இந்த அமைச்சின் / திணைக்களத்தில் நிரந்தர / தற்காலிக / பயிலுனர் / சமயாசமய உத்தியோகத்தராக சேவை செய்கிறார் என்றும் இப்பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது என்பதை அறியத்தருகிறேன் (தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும்)

....
திணைக்களப் பிரதானியின் கையொப்பம்
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோத்தர்

திகதி:
பதவி:
அமைச்சு/ திணைக்களம்: